www.PapaCambridge.com

UNIVERSITY OF CAMBRIDGE INTERNATIONAL EXAMINATIONS
General Certificate of Education
Advanced Subsidiary and Advanced Level

**TAMIL** **8689/02**
**9689/02**

Paper 2 Reading and Writing

October/November 2006

**1 hour 45 minutes**

Additional Materials: Answer Booklet/Paper

**READ THESE INSTRUCTIONS FIRST**

If you have been given an Answer Booklet, follow the instructions on the front cover of the Booklet.
Write your Centre number, candidate number and name on all the work you hand in.
Write in dark blue or black pen.
Do not use staples, paper clips, highlighters, glue or correction fluid.

Answer **all** questions.
Write your answers in **Tamil** on the separate Answer Paper provided.
Dictionaries are not permitted.
You should keep to any word limits in the questions.

At the end of the examination, fasten all your work securely together.
The number of marks is given in brackets [ ] at the end of each question or part question.

**பின்வரும் அறிவுறுத்தல்களை முதலில் படியுங்கள்**
உங்களிடம் விடை எழுதும் புத்தகம் தரப்பெற்றிருந்தால் அதன் முதல் பக்கத்தில்தரப் பெற்றிருக்கும் அறிவுறுத்தல்களைப் பின்பற்றுங்கள்
நீங்கள் எழுதும் அனைத்துப் பணிகளிலும் உங்கள் பரீட்சை நிலைய இலக்கம், பரீட்சார்த்தி இலக்கம், உங்கள் பெயர் ஆகியனவற்றை எழுதுங்கள்.
கருநீலம் அல்லது கருப்பு மை கொண்டு எழுதுங்கள்.
ஸ்டாப்ளர், பேப்பர் கிளிப்புகள், சரிசெய்யும் மை, ஹைலைட்டர் களைப் பயன்படுத்தாதீர்கள்.

அனைத்து வினாக்களுக்கும் விடை தாருங்கள்.

தனியாகத் தரப்பெற்றிருக்கும் விடைத்தாள்களில் உங்களுடைய விடைகளைத் தமிழில் எழுதுங்கள்.
அகராதிகள் அனுமதிக்கப்பெற மாட்டாது.

தேர்வின் முடிவில் தாங்கள் எழுதிய அனைத்துத் தாள்களையும் இறுக ஒன்றாகக் கட்டுங்கள்.
ஒவ்வொரு வினாவின் அல்லது வினாப்பகுதியின் முடிவிலும் அதற்குரிய புள்ளிகள் அடைப்புக் குறிக்குள் () தரப்பட்டிருக்கின்றன.

This document consists of **6** printed pages and **2** blank pages.

UNIVERSITY of CAMBRIDGE

www.PapaCambridge.com

## Section 1
பகுதி 1

First read the passage and then answer the questions.

முதலில் கீழே தரப்பட்டுள்ள பத்தியைப் படியுங்கள். பின்னர் தரப்பெற்றுள்ள வினாக்களுக்கு விடை அளியுங்கள்.

புலமைத் தொழிலை உழவாக உருவகப்படுத்திக் காண்பதோடு, தொழில்முறையை ஒப்பிட்டுக் காண்பதில் பயன் உண்டு. உழவுத் தொழிலில் தொன்றுதொட்டுக் கையாண்டு வந்த முறைகள் பல நம் நாட்டவருக்குத் தெரியும். அவற்றுள் சில பழமொழிகளாக வழங்குமளவிற்குச் செல்வாக்குப் பெற்றுவிட்டன. "அகல உழுவதைவிட ஆழ உழுவது நல்லது" என்பது அத்தகைய ஒரு பழமொழி. ஆழ உழுவதால், விதைக்கும் வித்து நன்றாக வேரூன்றவும் நிலத்தினடியில் உள்ள சத்துக்களைப் பயிர் நன்கு பெற்றுச்செழித்து வளரவும் முடியும், உழவனுடைய முயற்சியும் போதிய பயன்தரும். அகல உழுவதால் பயிர் செழிக்காது, பயன் நிரம்பாது, முயற்சி வீணாகும் என்றெல்லாம் உணர்ந்தே இக் கருத்தைப் பழமொழியாக்கி வழங்கினர் முன்னோர்.

இந்தப் பழமொழியைப் புலமைத் துறைக்கும் பொருத்திக் காணலாம். கல்வியிலும் அகல உழுதல், ஆழ உழுதல் என இருவகை உண்டு. பலவகை நூல்களையும் ஒவ்வொரு முறை படித்து வேறு வேறு நூல்களைத் தேடித் திரிகின்றவர் அகல உழுகின்றவர். பலவகை நூல்கள் அடங்கிய நூல்நிலையம் தமதாகவோ தமக்கு அண்மையில் உள்ளதாகவோ இருந்தாலும், அவற்றுள் ஒரு சிலவற்றை மட்டும் பொறுக்கி எடுத்துக்கொண்டு, அல்லது அந்த சில நூல்களை விலைக்கு வாங்கி வைத்துக்கொண்டு, அவற்றை மட்டும் திரும்பத் திரும்பப் படித்துப் பயன் பெறுகின்றவர் ஆழ உழுகின்றவர்.

இளமையில் பள்ளிக்கூடங்களில் படிக்கும்போது ஆழ உழும் கல்வி ஏற்பட வேண்டும் என்றே கல்வியதிகாரிகள் பாடப்புத்தகங்கள் என்று சிலவற்றை அமைக்கின்றார்கள். அந்தப் புத்தகங்களைத் திரும்பத் திரும்பப் படிக்குமாறு வழி வகுக்கின்றார்கள். ஆனாலும், இளமையின் தன்மை வேறானது; ஆழ உழுவதில் ஆர்வம் எழாத பருவம் இளமை; அதனால், பள்ளிக்கூட மாணவர்கள் பாடப்புத்தகங்களை ஒரு வகையாகப் படித்துவிட்டு வேறு வேறு நூல்களையும் செய்தித்தாள்களையும், சிறுவர் மலர்களையும் தேடித்திரிகின்றார்கள்.

பள்ளிக்கூடச் சிறுவர்க்கு உள்ள மனநிலையே வளர்ந்தவர்க்கும் இருத்தலாகாது. அது படிப்படியாக மாறி விட வேண்டும். அகல உழுதல், ஆழ உழுதல் என்ற இருவகைக் கல்வியையும் போற்ற வேண்டும். ஒரு பக்கம் பற்பல நூல்களைப் படிக்கும் பழக்கமும் வேண்டும்; மற்றொரு பக்கம் ஒரு சில நூல்களைத் தனியே தேர்ந்தெடுத்துக்கொண்டு அவற்றில் அடிக்கடி ஊறித் திளைக்கும் பழக்கமும் வேண்டும். உலகில் மிகச் சிறந்த அறிஞர்களாகத் திகழ்ந்தவர் பலரும் இவ்வாறு கற்று முன்னேறியவர்களே. எடுத்துக்காட்டாக, அறிஞர் பெர்னாட்ஷாவைக் குறிப்பிடலாம். பலவகை நூல்களையும் படிக்கின்ற பழக்கம் அவரிடம் உண்டு; ஆனால் அவர் ஆழ்ந்து கற்றுத் தேறிய நூல்கள் இரண்டே. ஒன்று பைபிள், மற்றொன்று ஷேக்ஸ்பியர் இலக்கியம். பைபிளில் மனப்பாடம் ஆகாத பகுதி இல்லை என்றும், ஷேக்ஸ்பியர் நாடகங்களில் தமக்குத் தெரியாத அடி ஒன்றும் இல்லை என்றும் பெருமை பாராட்டிக் கொள்வது வழக்கம்.

இவ்வாறு அகலக் கற்றும் ஆழக் கற்றும் வளர்ச்சி பெறாமல் தடைப்பட்டு நிற்கின்றவர்களும் உள்ளனர்; இந்த வளர்ச்சியைக் கடந்து அப்பால் நிற்கின்றவர்களும் உள்ளனர். வளர்ச்சி பெறாதவர் என்ற வகையில் முதலில் குறிப்பிடத்தக்கவர்கள், பலவகை நூல்களையும் மேம்போக்காகக் கற்று நுனிப்புல் மேய்கின்றவர்கள். அவர்கள் எந்த நூலிலும் தேர்ச்சி பெறுவதில்லை. இதைப் படித்தேன்; அதையும்

www.PapaCambridge.com

படித்திருக்கிறேன் என்று சொல்லிக்கொள்ளும் பெருமை ஒன்றே அவர்களுக்குத் தனியுரிமை
பெறாதவர் என்ற வகையில் அடுத்துக் குறிப்பிடத்தக்கவர்கள், நூலகத்தின் பரப்பை ஒரு
அறியாமல், கிணற்றுத் தவளைகளாய், ஒரு சில நூல்களில் மட்டுமே ஊக்கமும் ஆர்வமும் காட்
காலத்தைக் கழிப்பவர்கள்.

**1** For each of the definitions below, find in the text above the word or expression that gives its meaning most accurately.

கீழே தரப்பெற்றுள்ள ஒவ்வொரு வரைவிலக்கணத்துக்கும் மிகப் பொருத்தமான சொல்லை அல்லது சொற்றொடரை மேலே உள்ள பத்தியில் இருந்து எடுத்து எழுதுக.

எடுத்துக்காட்டு : நெல் பயிரிடும் இடம்
விடை : வயல்

அ. வேறு வேறு நூல்களைத் தேடி ஒவ்வொரு முறை படிப்பவர் [1]

ஆ. வரலாறு, பூகோளம் போன்ற பள்ளிக்கூடங்களுக்கான நூல்கள் [1]

இ. பள்ளிக்கூடங்களில் பாடப்புத்தகங்களை அமைப்பவர்கள் [1]

ஈ. பலவகையானவற்றையும் மேலோட்டமாகத் தெரிந்து கொள்வது [1]

உ. சிறுவர்களுக்குப் பயன்படும் செய்திகளைக் கொண்டு வாரம்தோறும் வெளிவரும் வெளியீடுகள் [1]

[Total: 5 marks]

(மொத்தம் 5 புள்ளிகள்)

**2** For each of the words/phrases in the list below, write a sentence using the word/phrase in such a way as to reveal its meaning.

கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு சொல்லின் அல்லது சொற்றொடரின் பொருள் தெளிவாகக்கூடிய வகையில் அவற்றை வாக்கியங்களில் அமைத்து எழுதுக.

எடுத்துக்காட்டு : உழவு
விடை : உழவுத் தொழில் உலகிற்கு அச்சாணியாக அமைவது

அ. புலமை [1]

ஆ. நூல் [1]

இ. விரும்பி [1]

ஈ. தடைப்பட்டு [1]

உ. தனியுரிமை [1]

[Total: 5 marks]

(மொத்தம் 5 புள்ளிகள்)

www.PapaCambridge.com

**3** Answer the following questions in Tamil. You must answer without copying comple[...]s word for word from the passage.
(The number of marks is given after each question. In addition, 5 marks will be given [...] general quality of language in the answer. Total number of marks = 15 + 5 = 20)

*பின்வரும் வினாக்களுக்குத் தமிழில் விடை தருக. பத்தியில் இருந்து வாக்கியங்களையோ சொற்களையோ அப்படியே பார்த்து எழுதாது சொந்த வாக்கியங்களில் விடைதருக. (ஒவ்வொரு வினாவிற்குமான புள்ளிகள் வினாவின் முடிவில் கொடுக்கப்பட்டுள்ளன. அதனுடன் மேலதிகமாக 5 புள்ளிகள் விடையில் காணப்படக்கூடிய பொதுவான மொழித்திறனுக்கு வழங்கப்படும். மொத்தப்புள்ளிகள் 15+5=20)*

அ. அகல உழுவதைவிட ஆழ உழுவது நல்லது. இந்தப் பழமொழி உணர்த்துவது என்ன? [3]

ஆ. அகல உழுதல், ஆழ உழுதல் - இத்தொடர்கள் கல்வியில் உணர்த்தும் பொருள்கள் யாவை? [3]

இ. பாடப்புத்தகங்கள் அமைக்கப் பெறுவதன் நோக்கம் என்ன? [3]

ஈ. அறிஞர் பெர்னாட்ஷாவின் படிக்கும் பழக்கம் பற்றிக் கூறுக? [3]

உ. படித்தும் வளர்ச்சி பெறாதவர் என்ற வகையில் இரண்டாவதாகக் குறிப்பிடத்தகவர்கள் யாவர்? [3]

[Quality of Language: 5]
[Total: 20 marks]

*(மொழித்திறனுக்கு 5 புள்ளிகள்)*
*(மொத்தம் 20 புள்ளிகள்)*

BLANK PAGE

www.PapaCambridge.com

www.PapaCambridge.com

## Section 2

பகுதி 2

Now read the second passage and then answer the questions.

தற்போது இரண்டாவது பத்தியைப் படியுங்கள். பின்னர் வினாக்களுக்கு விடை அளியுங்கள்.

சில நூல்கள் முதல் முறையாகப் படிக்கும் போது தொல்லையாக இருக்கும்; தொடர்ந்து படிக்கப் படிக்க, இன்பம் பயக்கும்; வழிகாட்டியாக நிற்கும்; மனச் சான்றைப் பண்படுத்தும்; வழுக்கி விழும்போதெல்லாம் காப்பாற்ற முன்வரும்; நெறி தவறும் போதெல்லாம் இடித்துரைத்துத் திருத்தும். வாழ்நாளில் உயிரின் உணர்வு போல் கலந்துவிடும் ஆற்றல் அத்தகைய நூல்களுக்கு உண்டு.

ரஸ்கின் என்னும் ஆங்கில ஆசிரியர் நூல்களைப் பற்றி வகைப்படுத்திச் சீர்தூக்கும் சொற்பொழிவு ஒன்றில் அழகான பாகுபாடு செய்துள்ளார். அந்த மணி நேரத்துக்கு உரிய நூல் என்றும், எந்தக் காலத்துக்கும் உரிய நூல் என்றும் இரு வகையாகப் பகுத்துரைக்கின்றார். திருவள்ளுவர் நூலை அவ்வாறு பாகுபாடு செய்யாவிட்டாலும் நட்பைப் பாகுபடுத்தி உரைப்பதன் வாயிலாக இந்தக் கருத்தைப் புலப்படுத்தியுள்ளார்; முகம் நகப் பழகும் நட்பு, அகம் நகப் பழகும் நட்பு என்று நட்பை இருவகை ஆக்கியுள்ளார். அதைக் கொண்டு பொழுதுபோக்குக்கு உரிய நூல் என்றும், வாழ்க்கைக்கு உரிய நூல் என்றும், நூலையும் பகுத்து உணரலாம். அவ்வாறு உணரும்போது, ரஸ்கின் என்னும் ஆங்கில ஆசிரியரின் கருத்தைக் காணமுடிகின்றது. நல்ல நூல் எது என்பதைத் தேர்ந்தெடுக்கவும் முடிகின்றது. இந்தச் சிறந்த அடிப்படையைக் கொண்டே, கல்வி என்னும் அதிகாரத்தில் கற்கும் முறையைக் கூறும்போது திருவள்ளுவர் கற்கத் தகுந்த நூல்களைக் கசடறக் கற்க வேண்டும் என்று கூறியுள்ளார். எல்லா நூல்களையும் கற்பதால் பயனில்லை என்று விலக்கி, கற்பதற்குரிய நல்ல நூல்களையே தேர்ந்து கற்க வேண்டும் என்றும் அறிவுறுத்தியுள்ளார். கண்டவரோடு எல்லாம் பழகாமல், பண்புடையாரிடம் மட்டும் நட்புக் கொள்ள வேண்டும் என்ற திருவள்ளுவர், நூல்களிலும் கண்டவற்றை எல்லாம் கற்றலாகாது என்றே அறிவுறுத்துகின்றார்.

பண்புடையாரின் தொடர்பைவிட, உயர்ந்த நூற்பயிற்சி மிக்க நன்மை தருவதாகும். பண்புடையார் உலகில் கிடைப்பதற்கு அரியர். கிடைத்தாலும் இடமும் காலமும் பிரிக்கும் பிரிவுக்கு உட்பட வேண்டி நேர்கின்றது; அதனால் ஒருங்கே வாழ்ந்து பழகும் வாய்ப்பு அரிதாக உள்ளது. நல்ல நூலின் தொடர்பு என்றும் நிலையாக உள்ளது. காலமும் இடமும் நம்மிடமிருந்து அதைப் பிரித்திட முடியாது; வேண்டும்போது உள்ளத்தே ஊற்றாய்த் தோன்றி உறுதுணை செய்ய வல்லது. பண்புடையாரை இவ்வாறு நம்மை விட்டுப் பிரியாதவாறு பிணித்து வைக்க முடியாது. வாழ்க்கை அத்தகைய சிறுமை உடையதாக இருப்பதால்தான் "கல்வியி னூங்கில்லை சிற்றுயிர்க்கு உற்ற துணை" என்றார் குமரகுருபரர்.

விஞ்ஞான வளர்ச்சியின் பயனாக, இடத்தினால் விளையும் பிரிவை இல்லையாக்கி, தொலைநாடுகளில் உள்ள நண்பரோடும் பழக முயலலாம்; ஆயின், சில ஆண்டுகளுக்கு முன்னரோ, சில நூற்றாண்டுகளுக்கு முன்னரோ வாழ்ந்து காலத்தால் பிரிக்கப்பட்ட சான்றோருடன் பழகுவதற்கு வழி இல்லை. நட்புலகத்தில் உள்ள இந்தக் குறையை நூலுலகம் தீர்த்துவிடுகின்றது. திருவள்ளுவர், இளங்கோ முதலானவர்களுடன் தொடர்பு கொள்ளாதவாறு காலம் நம்மைப் பிரித்துவைத்த போதிலும், அவர்களின் நூல்கள் அந்த அரிய தொடர்பை ஏற்படுத்தித் தருகின்றன. திருக்குறளையும்

www.PapaCambridge.com

சிலப்பதிகாரத்தையும் பயின்றவர்கள், வேண்டும் இடத்தில், வேண்டும் காலத்தி பெருமக்களின் திருவுள்ளங்களோடு தொடர்பு கொள்ள முடிகிறது. ரஸ்கின் முதலானவ காண்பதற்கும் நாம் காத்திருக்கும் நிலை போல் இல்லாமல், நாம் எளிதில் கண்டு மகிழுமாறு நமக அந்தப் புலவர் பெருமக்கள் என்றும் எங்கும் கருணை கொண்டு நூல்வடிவில் காத்திருக்கின்றனர். ஆகவே, நல்ல நூல் என்பது எழுத்துச் சொற்பொருள்களால் ஆன ஏடுகள் அடங்கிய ஒன்று அன்று; நமக்குக் காட்சி அளித்துக் கருணை பொழிய என்றும் எங்கும் நமக்காகக் காத்திருக்கின்ற பெருந்தகையின் திருவுருவம் எனலாம்.

**4** Answer the following questions in Tamil. You must answer without copying complete sentences word for word from the passage.

பின்வரும் வினாக்களுக்குத் தமிழில் விடை தருக. பத்தியில் இருந்து வார்த்தைகளையோ வாக்கியங்களையோ அப்படியே பார்த்து எழுதாது விடைகளைச் சொந்த வாக்கியங்களில் எழுதுக.

அ. நூல்களின் ஆற்றல் எத்தகையது? [3]

ஆ. ரஸ்கினும் திருவள்ளுவரும் நூல்களை எவ்வாறு பாகுபாடு செய்கின்றனர்? [3]

இ. பண்புடையாரின் தொடர்பு எத்தகையது? [3]

ஈ. நல்ல நூலின் தொடர்பு எத்தகையது? [3]

உ. புலவர் பெருமக்கள் பற்றி ரஸ்கின் கூறும் கருத்து யாது? [3]

[Quality of Language: 5]
[Total: 20 marks]

(மொழித்திறனுக்கு 5 புள்ளிகள்)
(மொத்தம் 20 புள்ளிகள்)

**5** Answer the following questions using a maximum of 140 words in Tamil.

**பின்வரும் வினாக்களுக்கு 140 சொற்களுக்கு மிகாமல் விடை தருக.**

நூல் கற்கும் முறைகளும் அவற்றால் ஏற்படும் பயன்களும் பற்றி எழுதுக. [10]

அந்த மணி நேரத்துக்கு உரிய நூல், எந்தக் காலத்துக்கும் உரிய நூல் என்பது பற்றி உமது கருத்துகளைத் தருக. [5]

[Quality of Language: 5]
[Total: 20 marks]

(மொழித்திறனுக்கு 5 புள்ளிகள்)
(மொத்தம் 20 புள்ளிகள்)

**BLANK PAGE**

www.PapaCambridge.com

Permission to reproduce items where third-party owned material protected by copyright is included has been sought and cleared where possible. Every reasonable effort has been made by the publisher (UCLES) to trace copyright holders, but if any items requiring clearance have unwittingly been included, the publisher will be pleased to make amends at the earliest possible opportunity.

University of Cambridge International Examinations is part of the University of Cambridge Local Examinations Syndicate (UCLES), which is itself a department of